**அல்லாஹ்வின் கட்டளை**

وَلَا تَهِنُوْا
وَلَا تَحْزَنُوْا
وَاَنْتُمُ الْاَعْلَوْنَ
اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ○

நீங்கள் தளர்ச்சியடையாதீர்கள். துயரமும் அடையாதீர்கள். நீங்கள் நம்பிக்கையாளர்களாயின் நீங்களே மேன்மையை அடைவீர்கள். (3:140)

بسم الله الرحمن الرحيم　نحمده ونصلي على رسوله الكريم　وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 4

இதழ் 42

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்லிம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

17 ஸஃபர் 1441 ஹிஜ்ரி கமரி 17 அஹா 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
17 அக்டோபர் 2019


**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிள் காலகட்டத்தை இருள் நிறைந்த மற்றும் வழிதவறிய காலமாகக் கண்டான். மேலும் அனைத்து விதமான தீமைகள் மற்றும் அநீதியின் கார்மேகம் உலகின் மீது படர்ந்திருந்தது. அந்த நேரத்தில் அந்த இருளை நீக்குவதற்கும், வழிதவறியவர்கள் நேர்வழி பெறும் பொருட்டாகவும் நற்பேறு பெற்றவர்களாக மாற்றுவதற்கும் ஒளி தரக்கூடிய ஒரு சூரியனை ஃபாரான் மலைக்குன்றின் மீது பிரகாசிக்கச் செய்தான். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தோன்றச் செய்தான்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**திருக்குர்ஆனுக்கு நினைவூட்டல் என்று பெயர் வைப்பதற்கான காரணம்**

பாருங்கள்! திருக்குர்ஆனுக்கு நினைவூட்டல் எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், அது மனிதனின் உட்புற கட்டளைகளை நினைவூட்டுகின்றது. பெயர்ச்சொல்லை வினைச்சொல்லாக பயன்படுத்துகையில் அது மிகைப்படுத்தும் சொல்லாகி விடுகிறது. உதாரணமாக, ஸைதும் ஆதிலும் இதன் பொருள் ஸைது மிகவும் நீதிமானாவார். திருக்குர்ஆன் ஒன்றும் புதிய போதனையை கொண்டு வரவில்லை.

மாறாக, மனிதனுக்குள் பல சக்திகளின் வெளிப்பாடாக இருக்கின்ற அவனுடைய உள்ளுணர்வை நினைவூட்டுகின்றது. உதாரணமாக, சகிப்புத்தன்மை, அர்ப்பணித்தல், தைரியம், கோபம், ஆளுமை, போதுமென்ற மனப்பான்மை போன்றவை. இயல்பாகவே மனிதனுக்குள் இருக்கின்ற அந்த உணர்வுகளைத் திருக்குர்ஆன் நினைவூட்டுகிறது.

இதைத் தான் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

فِيْ كِتٰبٍ مَّكْنُوْنٍ

(இது) நன்கு பாதுகாக்கப்பட்ட ஒரு நூலிலுள்ளதாகும். (56:79)

அதாவது இது எப்படிப்பட்ட வேதம் என்றால் மனித இயல்பில் மறைத்து வைக்கப்பட்ட விஷயங்களை எந்த ஒரு நபரும் கண்டிருக்க முடியாது. இந்த வேதம் வாசிக்கப்படும் போது மனிதனின் உள்ளுணர்வு மற்றும் ஆன்மீக ஆற்றலையும் மனிதனுக்குள் விண்ணிலிருந்து விதைக்கப்பட்ட அந்த உள்ளத்தின் ஒளியை நினைவூட்டுவதற்காகவே இதற்கு நினைவூட்டல் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் திருக்குர்ஆனை இறக்கி சுயமே ஓர் ஆன்மீக அற்புதத்தை வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல் மேலும் அதன் மூலம் மனிதன் ஞானங்கள் நிறைந்த கருத்துக்கள் மற்றும் ஆன்மீக அற்புதங்களை அறிய வேண்டும் என்பதே ஆகும். ஆனால் வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், திருக்குர்ஆன் கூறுகின்ற هُدًى لِّلْمُتَّقِيْنَ அதாவது இறையச்சமுடையோருக்கு நேர்வழியினை வழங்கக்கூடியது (2:3) என்ற இந்த அசல் நோக்கத்தை விட்டு விட்டு அதை வெறும் கதைகளின் ஒருங்கிணைப்பு என்று கருதப்படுகிறது.

மேலும் மிகுந்த கவனமற்றவர்களாகவும் தன்னலம் கொண்டவர்களாகவும் இருந்த அரபு நாட்டின் இணை வைப்பவர்கள் கூறியது போன்றே முன்னோர்களின் கட்டுக் கதைகள் என்று கூறி ஒதுக்கி வைக்கப்படுகிறது. உலகில் இருந்து காணாமல் போன அந்த ஆற்றல்களை நினைவுபடுத்துவதே அந்தக் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றமும், திருக்குர்ஆன் இறக்கப்பட்டதன் நோக்கமும் ஆகும். ஆனால் தற்போது எப்படிப்பட்ட காலம் வந்து விட்டது என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இது தொடர்பாக முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். அதாவது அந்தக் காலத்தில் திருக்குர்ஆனை ஓதுவார்கள். ஆனால் அவர்களுடைய தொண்டையிலிருந்து திருக்குர்ஆன் கீழே இறங்காது.

ஆகவே தற்போது நீங்கள் உங்களுடைய கண்களால் பார்க்கின்றீர்கள். மக்கள் திருக்குர்ஆனை எவ்வாறு மிகவும் அழகான குரலுடனும், அழகான ராகத்துடனும் ஓதுகிறார்கள். ஆனால் அது அவர்களின் தொண்டைக்குக் கீழே இறங்குவதில்லை. அதனால்தான் திருக்குர்ஆனிற்கு நினைவூட்டல் என்னும் மற்றொரு பெயரும் உள்ளது. அந்த ஆரம்ப காலகட்டத்தில் மனிதனுக்குள் மறைந்திருந்த புகக்கணிக்கப்பட்ட உண்மைகள் மற்றும் உணர்வுகளை நினைவூட்டுவதற்காகவே திருக்குர்ஆன் அருளப்பட்டது.

**இக்காலத்திலும் கூட விண்ணிலிருந்து ஓர் ஆசிரியர் வந்துள்ளார்**

اِنَّا لَهٗ لَحٰفِظُوْنَ

அதாவது நிச்சயமாக நாமே இதனைப் பாதுகாப்போம் (15:10)

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**இப்போது இங்குள்ள உங்களில் பெரும்பாலார் அன்ஸாருல்லாஹ்வின் வயதை அடைந்தவர்கள் ஆவர். அவர்கள் அன்ஸார்களும் ஆவர்; முஹாஜிர்களும் ஆவர். எனவே இந்த அடிப்படையில் உங்களை நீங்கள் ஆய்வு செய்து கொண்டே இருங்கள். அதாவது நமக்கு முன் எத்தகைய முன்னுதாரணங்கள் காட்டப்பட்டுள்ளதோ அதன்படி நாம் எந்த அளவுக்கு வழிநடக்கக் கூடியவர்களாக இருக்கின்றோம் என்று ஆய்வு செய்து பார்க்க வேண்டும்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நுஃமானைப் பற்றி நன்மையைத் தவிர வேறு எதுவும் கூறாதீர்கள். ஏனென்றால் அவர் அல்லாஹ்வின் மீதும், அவனது ரஸூலின் மீதும் அன்பு வைத்துள்ளார்**

**வியக்கத்தக்க அன்பு, நேசம் மற்றும் நகைச்சுவையான சபைகளாக அவை இருந்தன. காய்ந்த சபையாக அது இருக்கவில்லை ஹஸ்ரத் நுஃமான் அவர்களின் இயல்பிலும் நகைச்சுவை இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களது கூற்றைக் கேட்டு மகிழ்ச்சியடைவார்கள்**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற சஹாபாக்களான ஹஸ்ரத் நுஃமான் பின் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் குபைப் பின் யஸாஃப் (ரலி) அவர்களின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்**

**குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் கடந்த நாட்களில் வஃபாத்தான மதிப்பிற்குரிய செய்யது முஹம்மது சர்வர் சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய ரஷீதா பேகம் சாஹிபா மற்றும் ஃபிஜி நாட்டைச் சேர்ந்த நாந்தி ஜமாஅத்தின் தலைவர் மதிப்பிற்குரிய முஹம்மது ஷம்ஷீர் கான் சாஹிப் மற்றும் கர்தஸ்தானைச் சேர்ந்த தற்போது நார்வேயில் வசித்து வருகின்ற மதிப்பிற்குரிய ஃபாத்திமா முஹம்மது முஸ்தஃபா சாஹிபா ஆகிய மூவரின் நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள். மேலும் ஜுமுஆ மற்றும் அஸர் தொழுகையை ஜமு செய்து தொழ வைத்த பிறகு இவர்களது ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனில் நடைபெற்ற மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் தேசிய இஜ்திமாவின் சந்தர்ப்பத்தின்போது அமைக்கப்பட்ட மாநாட்டுத்திடலில் 13 செப்டம்பர் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **13 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۔

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபாக்களின் குறிப்பைப் பற்றி நான் எடுத்துக் கூறி வருகின்றேன். இன்றும் இதனையே நான் எடுத்துக் கூறுவேன். ஆனால் அதற்கு முன்பாக அன்ஸாருல்லாஹ் இஜ்திமா தொடர்பாக இதனையும் கூறி விடுகின்றேன். அதாவது, அந்த சஹாபாக்களில் அன்ஸார்களும் இருந்தனர். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு தமக்குள் தூய மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். தியாகங்களின் வியத்தகு முன்னுதாரணங்களை மட்டும் அவர்கள் வெளிப்படுத்தவில்லை. மாறாக, இறையச்சம் மற்றும் கலப்பற்ற தன்மை மற்றும் பற்றுணர்வின் உயர்வான முன்னுதாரணங்களை வெளிப்படுத்தினார்கள்.

இப்போது இங்குள்ள உங்களில் பெரும்பாலார் அன்ஸாருல்லாஹ்வின் வயதை அடைந்தவர்கள் ஆவர். அவர்கள் அன்ஸார்களும் ஆவர்; முஹாஜிர்களும் ஆவர். எனவே இந்த அடிப்படையில் உங்களை நீங்கள் ஆய்வு செய்து கொண்டே இருங்கள். அதாவது நமக்கு முன் எத்தகைய முன்னுதாரணங்கள் காட்டப்பட்டுள்ளதோ அதன்படி நாம் எந்த அளவுக்கு வழிநடக்கக் கூடியவர்களாக இருக்கின்றோம் என்று ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

இப்போது நான் முதலில் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் நுஃமான் பின் அமர் (ரலி) ஆகும். அன்னாரின் பெயர் நெஃமான் என்றும் நுஃமான் என்றும் வந்துள்ளது. அன்னாரின் தந்தையின் பெயர் அமர் பின் ரிஃபா ஆகும். மேலும் தாயாரின் பெயர் ஃபாத்திமா பின்த் அமர் ஆகும்.

அன்னாரின் பிள்ளைகளில் முஹம்மது, ஆமிர், சப்ரா, லுபாபா, கப்ஷா, மர்யம் மற்றும் உம்மே ஹபீப், அம்மத்துல்லாஹ், ஹகீமா ஆகியோர்களின் குறிப்பு கிடைக்கின்றது.

இப்னு இஸ்ஹாகிற்கேற்ப, ஹஸ்ரத் நுஃமான் அவர்கள் பைஅத்தே உக்பா சானியாவில் 70 அன்ஸார்களுடன் கலந்து கொண்டார்கள். அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நுஃமானைப் பற்றி நன்மையைத் தவிர வேறு எதுவும் கூறாதீர்கள். ஏனென்றால் அவர் அல்லாஹ்வின் மீதும், அவனது ரஸூலின் மீதும் அன்பு வைத்துள்ளார்.

அன்னாரது மரணம் அமீர் முஆவிய்யாவின் ஆட்சிக் காலத்தில் ஹிஜ்ரி 60 ஆம் ஆண்டு நிகழ்ந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 257 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அல்அகாமில் ஃபித்தாரீக் தொகுதி 3 பக்கம் 405 – 2006ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உம்மே சலமா அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பு சிரியா நாட்டின் புகழ்பெற்ற மற்றும் பிரபல்யமான நகரமான புஷ்ராவிற்கு பயணம் மேற்கொண்ட போது அந்த பயணத்தில் ஹஸ்ரத் நுஃமான் அவர்களும், ஹஸ்ரத் சஃபத் அவர்களுடம் உடன் இருந்தார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் சிரியாவிற்கு வணிக நோக்கத்திற்காக தமது சிறிய தந்தையுடன் வந்தபோது இந்த நகரத்தில்தான் தங்கினார்கள். அவ்வாறே ஹஸ்ரத் கதீஜாவின் பொருட்களையும் சிரியாவிற்கு எடுத்துச் சென்றபோதும் இந்த இடத்தில்தான் தங்கினார்கள். அந்த

பயணத்தில் ஹஸ்ரத் கதீஜா அவர்களின் அடிமையான நேசராவும் இருந்தார்.

எவ்வாறிருப்பினும் இந்த இரண்டு சஹாபாக்களும் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நுஃமான் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்கர் அவர்களுடன் வழிகாட்டியாக இந்த பயணத்தில் இருந்தார்கள். இந்த பயணத்தின்போதுதான் ஹஸ்ரத் நுஃமான் அவர்களுடன் இருந்தவர் கேளிக்கையாக ஒரு சமுதாயத்திடம் அன்னாரை விற்று விட்டார். இந்த சம்பவத்தை நான் ஹஸ்ரத் சஃபத் அவர்களின் குறிப்பில் எடுத்துக் கூறி விட்டேன். எவ்வாறிருப்பினும் சுருக்கமாக எடுத்துக் கூறி விடுகின்றேன்.

ஹஸ்ரத் நுஃமான் அவர்களுடன் இருந்த சஃபத் அவர்களிடம் கேளிக்கை செய்யும் பண்பு இருந்தது. மற்றுமொரு அறிவிப்பிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஹஸ்ரத் நுஃமான் அவர்களும், சஃபத் அவர்களும் ஒருவர் மற்றவரை கேளிக்கை செய்பவர்களாக இருந்தார்கள். அவர்களது இயல்பில் இந்த பண்பு இருந்தது.

சஃபத் அவர்கள் பயணத்தின்போது ஹஸ்ரத் நுஃமான் அவர்களிடம் எனக்கு உணவு தாருங்கள் என்று கூறினார்கள். அந்த நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் வெளியில் சென்றிருந்ததால் ஹஸ்ரத் நுஃமான் அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் வராமல் நான் உணவு தர மாட்டேன் என்று கூறினார்கள். அதற்கு சஃபத் அவர்கள், நீங்கள் எனக்கு உணவு வழங்கவில்லை என்றால் பிறகு நான் எத்தகைய விஷயத்தைக் கூறுவேன் என்றால் அதனால் உங்களுக்கு கோபம் ஏற்படும் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: அந்த சமயத்தில் அவர்கள் ஒரு சமுதாயத்தைக் கடந்து சென்றனர். அப்போது சஃபத் அவர்கள் அவர்களிடம் நீங்கள் எனது ஓர் அடிமையை வாங்கிக் கொள்வீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், ஆம்! வாங்கிக் கொள்கிறோம் என்று கூறினர். அதற்கு சஃபத் அவர்கள் அவர்களிடம், அவர் அதிகமாக பேசக் கூடியவர். மேலும் அவர் நான் விடுதலையானவன் ஆவேன் என்று கூறிக் கொண்டே இருப்பார். எனவே அவர் அவ்வாறு உங்களிடம் கூறினால் நீங்கள் அவரை விட்டு விடுங்கள் என்று கூறினார்கள்.

அதற்கு அந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், இல்லை; இல்லை. நாங்கள் அவரை உங்களிடமிருந்து விலைக்கு வாங்க விரும்புகின்றோம் என்று கூறினர். மேலும் அவர்கள் பத்து ஒட்டகத்திற்கான தொகையைக் கொடுத்து அவர்களை விலைக்கு வாங்கினார்கள். பிறகு அந்த மக்கள் நுஃமான் அவர்களிடம் வந்து அவர்களது தலையில் தலைப்பாகை அல்லது கயிற்றை கட்டினர். அவர்களை அடிமையாக ஆக்கி அழைத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தனர்.

எனவே நுஃமான் அவர்கள் அம்மக்களிடம், இவர் உங்களிடம் நகைச்சுவை செய்கின்றார். நான் விடுதலை செய்யப்பட்ட ஒருவன் ஆவேன். அடிமை அல்ல என்று கூறினார்கள். அதற்கு அம்மக்கள், அவர் உம்மைப் பற்றி முன்பே எங்களிடம் கூறி விட்டார் என்று கூறியவாறு அன்னாரை தம்முடன் அழைத்துச் சென்று விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்ததும் மக்கள் ஹஸ்ரத் நுஃமான் அவர்களைப் பற்றி கூறியதும் அன்னார் அந்த சமுதாயத்திற்குப் பின்னால் சென்றார்கள். மேலும் அவர்களது ஒட்டங்களை திருப்பிக் கொடுத்து விட்டு அன்னாரை திருப்பி அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: இந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் திரும்பி வந்து நடந்த விஷயத்தைக் கூறியபோது அன்னார் (ஸல்) அவர்களும், சஹாபாக்களும் சிரித்தார்கள். மேலும் இந்த சம்பவம் ஒரு வருடம் வரை அவர்களிடையே நகைச்சுவையாக பேசப்பட்டு வந்தது.

(சுனன் இப்னு மாஜா கிதாபுல் அதப் ஹதீஸ் எண் 3719)

சில புத்தங்களில் இந்த வேறுபாட்டுடன் இந்த சம்பவம் இவ்வாறு வருகிறது. அதாவது ஹஸ்ரத் சஃபத் அவர்கள் விற்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் நுஃமான் அவர்கள்தான் ஹஸ்ரத் சஃபத் அவர்களை விற்றார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 354 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இருவர் தொடர்பாகவும் இந்த சம்பவம் வருகிறது. ஹஸ்ரத் நுஃமான் தொடர்பாக அவர்களது இயல்பிலும் நகைச்சுவை செய்யும் பண்பு காணப்பட்டதாக வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரது பேச்சைக் கேட்டு சிரிப்பார்கள்.

ரவிய்யா பின் உஸ்மான் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு காட்டரபி வந்தார். மேலும் பள்ளிவாசலுக்குள் வந்ததும் தமது ஒட்டகத்தை முற்றத்தில் அமர்த்தினார். அப்போது சில சஹாபாக்கள் ஹஸ்ரத் நுஃமான் அவர்களிடம், நீங்கள் இந்த ஒட்டகத்தை அறுத்து விட்டால் நாம் அதை உண்போம். ஏனென்றால் எங்களது உள்ளம் மாமிசம் உண்ண விரும்புகிறது. ஆனால் இது காட்டரபியின் ஒட்டகமாகும். அவர் புகார் செய்வார். பெருமானார் (ஸல்) அவர்களிடம் புகார் சென்றால் பிறகு அன்னார் அதற்குரிய விலையை கொடுத்து விடுவார்கள் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நுஃமான் அவர்கள் அவர்களது பேச்சைக் கேட்டு அந்த ஒட்டகத்தை அறுத்து விட்டார். பிறகு அந்த காட்டரபி வெளியே வந்தபோது தமது ஒட்டகத்தை இந்நிலையில் கண்டு, முஹம்மதே (ஸல்)! எனது ஒட்டகம் அறுக்கப்பட்டு விட்டது என்று மிகவும் கூச்சலிட்டார். பெருமானார் (ஸல்) அவர்கள் வெளியே வந்தார்கள்.

மேலும், யார் இதனைச் செய்தார்கள் என்று கேட்டார்கள். அதற்கு நுஃமான் என்று மக்கள் கூறினர். எனவே அன்னார் அவரைத் தேடிச் சென்றார்கள். எனவே நுஃமான் ஒளிந்து கொண்டார்கள். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரைத் தேடிச் சென்றார்கள். இறுதியில் ஹஸ்ரத் ஸியாப் பின்த் ஸுபைர் பின் அப்துல் முத்தலிபின் ஒளிந்திருப்பதைக் கண்டார்கள். எங்கு அவர்கள் ஒளிந்து கொண்டார்களோ அங்கு ஒரு நபர் தமது விரலை நுஃமான் அவர்களின் பக்கம் சைகை செய்தவாறு, யா ரஸூலல்லாஹ் எனக்கு அவர் எங்கு இருக்கின்றார்? என்பது தெரியவில்லை என்று கூறினார்.

எவ்வாறிருப்பினும் பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களை அங்கிருந்து வெளியே வரச் செய்தார்கள். மேலும் இந்த செயலை நீங்கள் ஏன் செய்தீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு நுஃமான் அவர்கள், நபிகள் நாயகமே! நான் இதனை அறுத்து விட்டேன் என்று எந்த மக்கள் உங்களிடம் இது குறித்து தகவல் தந்தார்களோ அவர்களே என்னைத் தூண்டினார்கள்.

அவர்கள்தாம் என்னிடம், இதற்குரிய கூலியை பெருமானார் (ஸல்) அவர்கள் கொடுத்து விடுவார்கள் என்று கூறினார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் நுஃமான் அவர்களது முகத்தைத் தமது கரங்களால் தடவினார்கள். மேலும் புன்முறுவல் செய்தார்கள். மேலும் அன்னார் அந்த காட்டரபிக்கு அந்த ஒட்டகத்தின் விலையைக் கொடுத்து விட்டார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 332 நுஃமான் பின் மாலிக் – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சுபைர் பின் பகார் அவர்கள் அல்ஃபுக்ஹா வல் மஸாஹிப் என்ற தமது நூலில் ஹஸ்ரத் நுஃமான் அவர்கள் தொடர்பாக ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டவாறு எழுதுகின்றார்கள்: மதீனாவில் வெளியில் இருந்து எப்போது வியாபாரி வந்தாலும் ஹஸ்ரத் நுஃமான் அவர்கள் அவரிடமிருந்து எதையாவது பெருமானார் (ஸல்) அவர்களுக்காக வாங்கி விடுவார்கள். மேலும் அதனை அன்னாரிடம் கொண்டு வந்து, இது என் தரப்பிலிருந்து உங்களுக்கு அன்பளிப்பாகும் என்று கூறுவார்கள்.

அந்த பொருளின் எஜமானர் ஹஸ்ரத் நுஃமான் அவர்களிடம் அதற்கான தொகையை வாங்க வரும்போது அவர் அந்த வியாபாரியை பெருமானார் (ஸல்) அவர்களிடம் அழைத்துக் கொண்டு வந்து, நான் உங்களுக்காக வாங்கிக் கொடுத்த அந்த பொருளின் விலையை இவருக்குக் கொடுங்கள் என்று கூறுவார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் இந்தப் பொருளை எனக்கு அன்பளிப்பாக கொடுக்கவில்லையா? என்று கேட்டார்கள்.

அதற்கு அவர், நபிகள் நாயகமே! இறைவன் மீது ஆணையாக! இந்தப் பொருளுக்கான தொகையை செலுத்த என்னிடம் எந்த தொகையும் இல்லை. ஆனால் அந்தப் பொருள் உண்பதற்கான பொருளாக இருந்தால் தாங்கள் அதை உண்ண வேண்டும். மேலும் அது வைத்துக் கொள்வதற்கான பொருள் என்றால் பிறகு நீங்கள் அதை வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பமாக இருந்தது என்று கூறினார்கள். இதனைக்கேட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் சிரித்தார்கள். மேலும் இந்தப் பொருளின் எஜமானருக்கு அதற்குரிய தொகையை செலுத்துவதற்கான கட்டளை பிறப்பித்தார்கள்.

(சுபைர் பின் பகார் அவர்கள் எழுதிய அல்ஃபுகஹா வல் மஸாஃ என்ற நூல் பக்கம் 27, 2017 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

ஆக வியக்கத்தக்க அன்பு, நேசம் மற்றும் நகைச்சுவையான சபைகளாக அவை இருந்தன. காய்ந்த சபையாக அது இருக்கவில்லை

அடுத்து நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபி ஹஸ்ரத் குபைப் பின் அஸாஃப் ஆவார்கள். அன்னார் அன்ஸார்களின் கஸ்ரஜ் கோத்திரத்தின் பனூ ஹாஷிம் கிளையைச் சார்ந்தவர்கள். மற்றொரு கூற்றிற்கேற்ப அன்னாரது பெயர் குபைப் பின் யஸாஃப் என்றும் வந்துள்ளது. அன்னாரது தந்தையின் பெயர் யஸாஃப் ஆகும். இன்னொரு கூற்றிற்கேற்ப யுஸாஃப் என்றும் வந்துள்ளது. அன்னாரது பாட்டனாரின் பெயர் உத்பா மட்டுமின்றி உன்பா என்றும் கூறப்படுகிறது.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 467 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 275 குபைப் பின் யஸாஃப் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 683 குபைப் பின் யஸஃப் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னாரின் தாயாரின் பெயர் சலமா பின் மஸ்ஊது ஆகும். அன்னாரது குழந்தைகளில் அபூ கஸீர் என்ற ஒரு மகன் இருக்கின்றார். அவரது பெயர் அப்துல்லாஹ் ஆகும். இவர் ஜமீலா பின்த் அப்துல்லாஹ் பின் அபீ சலூலிற்குப் பிறந்தவர் ஆவார். இரண்டாவது மகன் அப்துர் ரஹ்மான் ஆகும். இவர் உம்மே வலதிற்கு பிறந்தார். மேலும் ஸைனப் பின் கைஸ் அவர்களின் மூலம் உனீஸா என்ற மகள் பிறந்தார்.

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் குபைப் அவர்கள் அன்னாரது விதவை மனைவியான ஹபீபா பின்த் கார்ஜாவை திருமணம் செய்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 275,276 குபைப் பின் யஸாஃப் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 153 குபைப் பின் யஸஃப் – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் குபைப் அவர்கள் மதீனா ஹிஜ்ரத் செய்யப்பட்டபோது முஸ்லிமாக இருக்கவில்லை. இருப்பினும் அன்னாருக்கு மதீனா ஹிஜ்ரத் செய்யப்பட்டபோது முஹாஜிரீன்களுக்கு பணிவிடை செய்யும் நற்பாக்கியம் கிடைத்தது. முஸ்லிமாகவில்லைதான். எனினும் அவர்கள் விருந்து உபசரிப்பு செய்தார்கள். ஹஸ்ரத் தல்ஹா பின் அப்துல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் சுஹைப் பின் ஸினான் அவர்களது வீட்டில் தங்கினார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 338 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்னொரு கூற்றிற்கேற்ப ஹஸ்ரத் தல்ஹா ஹஸ்ரத் அஸது பின் ஸிராரா அவர்களின் வீட்டில் தங்கியதாக வருகிறது. அதே போன்று ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் மதீனா ஹிஜ்ரத் செய்தபோது ஒரு அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் குபைப் அவர்களின் வீட்டில் அதாவது கபாவில் ஸன்ஆ என்ற இடத்தில் தங்கியதாக வருகிறது. ஸன்ஆ ஓர் இடத்தின் பெயராகும். இது மதீனாவில் பனீ ஹாரிஸ் பின் கஸ்ரஜ் மக்கள் வசிக்கக்கூடிய இடத்தில் உள்ளது.

இன்னொரு அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஹஸ்ரத் கார்ஜா பின் ஸைது அவர்களின் வீட்டில் தங்கியதாக வருகிறது.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 348 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & லுகாத்துல் ஹதீஸ் தொகுதி 2 பக்கம் 373)

பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து அன்னார் கலந்து கொண்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 276 கு – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 683 குபைப் பின் யஸஃப் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. அதாவது குபைப் அவர்கள் மதீனாவில் இருந்தபோதிலும் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாமலேயே இருந்தார்கள். எதுவரை என்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ர் போருக்காக சென்றபோது வழியில் அன்னாரை இவர்கள் சந்தித்தார்கள். பிறகு இஸ்லாதை ஏற்றுக் கொண்டார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 152 குபைப் பின் யஸஃப் – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஹீஹ் முஸ்லிமில் ஹஸ்ரத் குபைப் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சம்பவம் தொடர்பாக இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மனைவியான ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் மைதானத்தை நோக்கிச் சென்றபோது மதீனாவிலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள ஹுரத்துல் கப்ரா என்ற இடத்தை அடைந்தபோது ஒரு நபர் அன்னாரை சந்தித்தார். பெருமானார் (ஸல்) அவர்களது சஹாபாக்கள் அந்த நபரைக் கண்டதும் மிகவும் மகிழ்ச்சியுற்றார்கள்.

அவர் அன்னாரை சந்தித்து, நான் உங்களுடன் செல்லவும், பொருட் செல்வத்திலிருந்து பங்கை பெற்றுச் செல்லவும் வந்துள்ளேன் என்று கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் மீது நம்பிக்கை கொள்கின்றீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர், நான் ஈமான் கொள்ளவில்லை. நான் முஸ்லிம் இல்லை என்று கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், திரும்பிச் சென்று விடுங்கள். ஏனென்றால் எந்தவொரு இணை வைப்பவரிடமும் நான் உதவி பெற மாட்டேன் என்று கூறினார்கள்.

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த நபர் திரும்பிச் சென்று விட்டார். அவர் மதீனாவிலிருந்து 6,7 மைல் தொலைவிலுள்ள ஷஜ்ரா என்ற இடத்தை அடைந்தார். அங்கு அன்னார் (ஸல்) சென்றடைந்ததும் அந்த நபர் மீண்டும் அன்னாரை சந்தித்தார். முதலில் கூறியது போன்றே இப்போதும் கூறினார். பெருமானார் (ஸல்) அவர்களும் முதலில் கூறியது போன்றே இப்போதும் கூறினார்கள். அன்னார் கூறினார்கள்: திரும்பிச் சென்று விடுங்கள். ஏனென்றால் எந்தவொரு இணை வைப்பவரிடமும் நான் உதவி பெற மாட்டேன்.

பிறகு அவர் திரும்பிச் சென்றார். அவர் மதீனாவிலிருந்து 6,7 மைல் தொலைவிலுள்ள பைஸா என்ற இடத்தை அடைந்தார். ஷஜ்ரா என்ற இடமும் இதற்கு அருகிலேயே இருக்கின்றது. இந்த இரண்டு இடங்களும் அருகிலேயே உள்ளன. அந்த இடத்தில் அந்த நபர் பெருமானார் (ஸல்) அவர்களை சந்தித்தார். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள், முதலில் கூறியது போன்றே, எந்தவொரு இணை வைப்பவரிடமும் நான் உதவி பெற மாட்டேன் என்று கூறினார்கள். மேலும் கூறினார்கள்: நீங்கள் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் மீது நம்பிக்கை கொள்கின்றீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர் ஆம் என்று கூறினார். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள், செல்லுங்கள். இப்போது நீங்கள் என்னுடன் வரலாம் என்று கூறினார்கள்.

(சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஜிஹாது... ஹதீஸ் எண் 1817 & மஜ்மவுல் பல்தான் தொகுதி 3 பக்கம் 142)

இந்த அறிவிப்பின் விளக்கத்தில் எழுதப்பட்டுள்ளது. அதாவது எந்த நபர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார் என்று இந்த அறிவிப்பில் வருகிறதோ அவர் ஹஸ்ரத் குபைப் அவர்கள் ஆவார்கள்.

(அல் பஹ்ருல் முஹீத்.... தொகுதி 31 பக்கம் 620)

ஹஸ்ரத் குபைப் பின் இஸாஃப் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது மற்றும் பத்ர் போரில் கலந்து கொண்டது தொடர்பான குறிப்பை எடுத்துக் கூறியவாறு அல்லாமா நூருத்தீன் ஹலபீ அவர்கள் சீரத்துல் ஹல்பிய்யா என்ற தமது நூலில் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

மதீனாவில் குபைப் பின் யஸாஃப் என்ற பெயருடைய ஒரு நபர் வலிமைமிக்கவராகவும், வீரமிக்கவராகவும் இருந்தார். அந்த நபரின் பெயர் வரலாற்று நூல்களில் குபைப் பின் அஸாஃப் என்று எழுதப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் இந்த நபர் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர். பத்ர் போர் வரை முஸ்லிமாகவில்லை. ஆனால் இவரும் தமது சமுதாயமான கஸ்ரஜ் கோத்தினருடன் போரில் வெற்றி பெற்றால் பொருட் செல்வம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் போருக்காக சென்றார். முஸ்லிம்கள் அவருடன் சென்றதில் மிகவும் மகிழ்ச்சியுற்றனர். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களோ, எங்களது மார்க்கத்தில் இருப்பவர்கள்தான் எங்களுடன் போர் செய்வதற்காக செய்வார்கள் என்று கூறினார்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் திரும்பிச் சென்று விடுங்கள். ஏனென்றால் எந்தவொரு இணை வைப்பவரிடமும் நாங்கள் உதவி பெற விரும்பவில்லை என்று கூறினார்கள். குபைப் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் இரண்டு முறை திருப்பி அனுப்பி விட்டார்கள். மூன்றாவது முறை பெருமானார் (ஸல்) அவர்கள் குபைபிடம், நீர் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் மீது ஈமான் கொள்கின்றீரா? என்று கேட்டார்கள். அதற்கு அவர் ஆம் என்று கூறி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். பிறகு அவர் மிகவும் தைரியத்துடன் மிகச் சிறந்த முறையில் போர் செய்தார்.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் தொகுதி 2 பக்கம் 204 பாப் ஸிக்ர் முகாஸிய்யாங/கஸ்வா பத்ருல் குப்ரா– 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முஸ்னது அஹ்மது பின் ஹம்பலில் ஹஸ்ரத் குபைப் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சம்பவத்தின் விளக்கம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அதாவது நானும் எனது சமுதாயத்தின் இன்னொரு நபரும் பெருமானார் (ஸல்) அவர்கள் போருக்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்த போது வந்தோம். அப்போது நாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. நாங்கள் அன்னாரிடம், நிச்சயமாக எங்களுக்கு வெட்கம் வருகிறது. அதாவது எங்களது சமுதாயம் போருக்காக செல்கின்றது. ஆனால் நாங்களோ அவர்களுடன் அதில் கலந்து கொள்ளவில்லை என்று கூறினோம்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் இருவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு நாங்கள், இல்லை என்று கூறினோம். அதற்கு அன்னார், நிச்சயமாக நாங்கள் இணை வைப்பவர்களுக்கு எதிராக இணை வைப்பவர்களிடம் உதவி பெற விரும்ப மாட்டோம். இணை வைப்பவர்களுடன் போர் நடைபெறுகிறது. அவ்வாறிருக்கும்போது இணை வைப்பவர்களிடம் உதவி பெறுவது எவ்வாறு சாத்தியமாகும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் குபைப் அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே நாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டோம். பெருமானார் (ஸல்) அவர்ளுடன்

## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருள்களிலிருந்து, (இறைவனுக்காகச்) செலவு செய்யாத வரையில் உங்களால் ஒருபோதும் முழுமையான நன்மையினைப் பெற முடியாது. நீங்கள் எப்பொருளைச் செலவு செய்கின்றீர்களோ அதனை நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிகின்றான். (3:93)

A.Nasir Ahmad
அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்

இந்தப் போரில் கலந்து கொண்டோம். இந்தப் போரில் நான் ஒருவனைக் கொன்றேன். மேலும் அவன் எனக்கு காயத்தை ஏற்படுத்தினான். பிறகு நான் கொலை செய்த அந்த நபரின் மகளை திருமணம் செய்து கொண்டேன். அவள், உங்களுக்கு காயத்தை ஏற்படுத்திய அந்த நபரை உங்களால் மறக்க முடியாது என்று கூறி வந்தாள். அதற்கு நான், நீயும் உனது தந்தையை விரைவாக நெருப்பில் நுழையச் செய்த அந்த நபரை மறக்க மாட்டாய் என்று கூறி வந்தேன்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 411 ஹதீஸ் எண் 15855 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பத்ர் போரில் ஹஸ்ரத் குபைப் அவர்கள் மக்கத்து குரைஷிகளின் தலைவனான உமய்யா பின் ஹல்ஃபை கொலை செய்தார்கள். இந்த சம்பவத்தைப் பற்றி முஸ்னது அஹ்மது பின் ஹம்பலில் சுருக்கமாக குறிப்பு காணப்படுகிறது.

திருமண சம்பவம் தொடர்பாக அல்லாமா நூருத்தீன் அவர்கள் சீரத்தே ஹல்பிய்யா என்ற தமது நூலில் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

பத்ர் மைதானத்தில் நான் உமைய்யா பின் ஹல்ஃபை சந்தித்தேன். அறியாமைக் காலத்தில் அவன் எனது நண்பன் ஆவான். உமைய்யாவுடன் அவனது மகன் அலியும் இருந்தான். அவன் தனது தந்தையின் கையை பிடித்திருந்தான். இந்த அலி யார் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்வதற்கு முன்பாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்த முஸ்லிம் ஆவார். அந்த நேரத்தில் அவர்களது உறவினர்கள் அவர்களை இஸ்லாத்தை விட்டு வெளியேற்ற முயற்சி செய்தனர். அதில் அவர்கள் வெற்றியும் பெற்றனர். பிறகு இந்த மக்கள் நிராகரிப்பின் நிலையிலேயே கொல்லப்பட்டனர். இந்த மக்கள் தொடர்பாகவே அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்.

إِنَّ الَّذِينَ تَوَفَّاهُمُ الْمَلَائِكَةُ ظَالِمِي
أَنفُسِهِمْ قَالُوا فِيمَ كُنتُمْ ۖ قَالُوا كُنَّا مُسْتَضْعَفِينَ فِي الْأَرْضِ ۚ

பொருள்: தமக்குத்தாமே தீங்கிழைத்தவர்களுக்கு வானவர்கள் மரணத்தைக் கொடுக்கின்றபோது (அவர்களிடம்) நீங்கள் எ(ந்த எண்ணத்)தி;ல இருந்தீர்கள் என்று அவர்கள் கேட்பார்கள். இதற்கு அவர்கள் நாங்கள் பலவீனர்களாக எண்ணப்பட்டோம் என்று கூறுவார்கள். (4:98)

எவ்வாறிருப்பினும் கூறுகின்றார்கள்: இத்தகைய மக்களில் ஹாரிஸா பின் ரபீஆ, அபூ கைஸ் பின் ஃபாதிஹ், அபூ கைஸ் பின் வலீது, ஆஸ் பின் அன்பா மற்றுமம்அலி பின் உமைய்யா ஆகியோர் அடங்குவர்.

அல்லாமா நூருத்தீன் ஹலபீ அவர்கள் சீரத் ஹிஷாமில் எழுதுகின்றார்கள்: இந்த மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட போது பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்தார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தபோது இந்த மக்களை இவர்களது உறவினர்கள் மக்காவிலேயே தடுத்து நிறுத்தினார்கள். அவர்களை சோதனைக்கு ஆளாக்கினார்கள். இதன் விளைவாக அவர்கள் குழப்பத்தில் மூழ்கி விட்டார்கள். பிறகு இஸ்லாத்திலிருந்து விலகி விட்டார்கள்.

பிறகு பத்ர் போரின் போது இவர்கள் தமது சமுதாயத்துடன் வந்தார்கள். பிறகு இவர்கள் அனைவரும் அங்கு கொல்லப்பட்டார்கள். இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், இந்த மக்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்வதற்கு முன்பாக மார்க்கத்திலிருந்து விலகிச் செல்லவில்லை. முதல் அறிவிப்பின் கூற்றிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், இந்த மக்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்வதற்கு முன்பாகவே நிராகரிப்பின் பக்கம் திரும்பிச் சென்று விட்டார்கள்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் கூறுகின்றார்கள்: என்னிடம் பல சங்கிலிகள் இருந்தன. அதனை நான் தூக்கிக் கொண்டு வந்திருந்தேன். போரின் போது நடந்தவற்றை விவரிக்கின்றார்கள். அப்போது உமைய்யா என்னை பார்த்தபோது அறியாமை காலத்தில் இருந்த எனது பெயரை அதாவது அப்தே உமர் என்று கூறி அழைத்தான். அதற்கு நான் எந்த பதிலும் கொடுக்கவில்லை.

ஏனென்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் எனது பெயரை அப்துர் ரஹ்மான் என்று வைத்தபோது என்னிடம், உமது தந்தையும், பாட்டனாரும் உமக்கு வைத்த பெயரை நீங்கள் விரும்ப மாட்டீர்கள் அல்லவா? என்று கேட்டார்கள். அதற்கு நான் ஆம் என்று கூறினேன். அதற்கு உமைய்யா, எனக்கு ரஹ்மானைத் தெரியாது. பிறகு உமைய்யா, அப்துர் ரஹ்மான் என்று எனது பெயரைக் கூறி அழைத்ததும் நான் அதற்கு பதிலளித்தேன்.

எவ்வாறிருப்பினும் உமைய்யா அன்னாரது முந்தைய பெயரைக் கொண்டு அழைத்தபோது அன்னார் தம்மைத்தான் அவர் அழைக்கின்றார் என்று தெரிந்திருந்தும் அதற்கு எந்த பதிலும் கொடுக்கவில்லை. பிறகு உமைய்யா அன்னாரின் தற்போதைய பெயரைக் கூறி அழைத்ததும அன்னார் அதற்கு பதிலளித்தவாறு அவன் பக்கம் கவனம் செலுத்தினார்கள். அப்போது உமைய்யா அன்னாரிடம், உமக்கு என்மீது ஏதாவது உரிமை இருக்கின்றது என்றால் பிறகு உம்மிடம் இருக்கின்ற இந்த சங்கிலியை விட நான் சிறந்தவன் ஆவேன் என்று கூறினான். முந்தைய நட்பு இருந்தது.

அதைப் பற்றி எடுத்துக் கூறியவாறு, இதுதான் காப்பாற்றுவதற்குரிய வழியாகும். ஏனென்றால் இப்போது தோல்வி ஏற்பட்டு விட்டது. அதற்கு நான் அவரிடம் சரி என்று கூறினேன். பிறகு அந்த சங்கிலியை கீழே வைத்து விட்டு உமைய்யா மற்றும் அவனது மகனான அலியின் கையை பிடித்துக் கொண்டேன். உமைய்யா கூறினார்: நான் முழு வாழ்நாளிலும் பத்ர் நாளைப் போன்று வேறு எந்த நாளையும் கண்டதில்லை. பிறகு அந்த நபர் யார்? என்று உமைய்யா கேட்டார். அதற்கு நான் அவர் ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் என்று கூறினேன்.

எவ்வாறிருப்பினும் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறுகின்றார்கள்: இதற்குப் பிறகு நான் இந்த இருவரின் கையையும் படித்துக் கொண்டு சென்றேன். திடீரென்று ஹஸ்ரத் பிலால் அவர்கள் உமைய்யா என்னுடன் இருப்பதைக் கண்டார்கள். மக்காவில் ஹஸ்ரத்

**திருக்குர்ஆனிலிருந்து...**

எல்லா மக்களு(டைய பயனு)க்காகவும் முதன் முதலாக உருவாக்கப்பெற்ற இல்லம் மக்காவிலுள்ளதாகும். அது எல்லா உலகங்களுக்குரியதும் நேர்வழிக்குரியதுமா(ன இடமா)கும். (3:97)

M.Sabahul Islam & Mohaideen Ali (Melapalayam)

பிலால் அவர்கள் இஸ்லாத்தை விட்டு முகம் திருப்பி விட வேண்டும் என்பதற்காக உமைய்யா பெரும் துன்பங்களைக் கொடுத்து வந்தான். ஹஸ்ரத் பிலால் அவர்கள் உமைய்யாவைப் பார்த்தும் கூறினார்கள்: நிராகரிப்பாளர்களின் தலைவன் உமைய்யா பின் ஹல்ஃப் இங்கு இருக்கின்றான். இவன் தப்பித்து விட்டால் பிறகு நான் தப்பிக்க மாட்டேன் என்று கருதுங்கள்.

இதைக் கேட்டு விட்டு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் என் கைதி தொடர்பாக இவ்வாறு கூறுகின்றீர்கள். ஆனால் ஹஸ்ரத் பிலால் அவர்கள் மீண்டும் மீண்டும் இதனையே கூறினார்கள். இவன் தப்பித்து விட்டால் பிறகு நான் தப்பிக்க மாட்டேன். நானும் அவருக்கு இதே பதிலையே கூறி வந்தேன்.

பிறகு ஹஸ்ரத் பிலால் அவர்கள் மிகவும் உரத்த குரலில், அல்லாஹ்வின் உதவியாளர்களே! இவர் நிராகரிப்பாளர்களின் தலைவன் உமைய்யா பின் ஹல்ஃப் ஆவான். இவன் தப்பித்து விட்டால் பிறகு நான் தப்பிக்க மாட்டேன் என்று கூறினார்கள். இவ்வாறு மீண்டும் மீண்டும் கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறுகிறார்கள்: இதைக் கேட்டு அன்ஸாரிகள் ஓடி வந்தனர். அவர்கள் நாலாப் புறமும் எங்களை சூழ்ந்தனர். பிறகு ஹஸ்ரத் பிலால் அவர்கள் வாளைக் கொண்டு உமைய்யாவின் மகனின் மீது தாக்குதல் தொடுத்தார்கள். இதன் காரணமாக அவன் கீழே விழுந்தான். இந்த அச்சத்தின் காரணமாக உமைய்யா எந்த அளவுக்கு உரத்த குரலில் கத்தினான் என்றால் அவ்வாறான சப்தத்தை அவன் ஒருபோதும் கேட்டது கிடையாது. இதற்குப் பிறகு அன்ஸார்கள் இந்த இருவர் மீதும் வாள்களால் தாக்குதல் தொடுத்தனர். வெட்டி சாய்த்தனர்.

(அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 2 பக்கம் 232,233 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஹீஹ் புகாரியில் உமைய்யா கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இவ்வாறு வந்துள்ளது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் உமைய்யா பின் ஹலஃபிற்கு கடிதம் எழுதினேன். அதில், அவர் எனது செல்வம் மற்றும் குடும்பத்தை மக்காவில் பாதுகாக்க வேண்டும். மேலும் அவர் நான் அவரது செல்வம் மற்றும் பொருட்களை மதீனாவில் பாதுகாப்பேன். மேலும் நான் எனது பெயரை அப்துர் ரஹ்மான் என்று எழுதியபோது உமைய்யா எனக்கு அப்துர் ரஹ்மான் யார் என்று தெரியாது. அறியாமைக் காலத்திலிருந்த உமது பெயரை எழுது என்று கூறினான். எனவே நான் எனது பெயரை அப்தே உமர் என்று எழுதினேன்.

அவன் பத்ர் போர் மைதானத்தில் இருந்த போது நான் ஒரு மலை உச்சியின் பக்கம் சென்று விட்டேன். அவனுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காகச் சென்றேன். ஆனால் பிலால் அவர்கள் உமைய்யாவை எங்கேயோ பார்த்து விட்டார்கள். அங்கு அவர்கள் சென்று அன்ஸார்களின் ஒரு சபையில் நின்றவாறு, இவன் உமைய்யா பின் ஹல்ஃப் ஆவான். இவன் தப்பித்து விட்டால் பிறகு நான் தப்பிக்க மாட்டேன் என்று கூறினார்கள். எனவே பிலால் அவர்களுடன் சில மக்கள் எங்களுக்குப் பின்னால் வந்தார்கள். உமைய்யாவைப் பிடித்து விடுவார்களோ என்று நான் அஞ்சினேன்.

அப்துர் ரஹ்மான் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அவர்களிடம் கூறினேன். நான் உங்களை கைதியாக்கி விடுகின்றேன். எனவே நான் உமைய்யா மற்றும் அவனது மகனை கைதியாக்கி விட்டேன். ஆனால் ஹஸ்ரத் பிலால் அவர்களுடன் தாக்குதல் தொடுக்க வந்த முஸ்லிம்கள் உமைய்யாவின் மகனைக் கொன்றார்கள். பிறகு உமைய்யாவையும் அவர் தடித்த உடலை கொண்டிருந்தார். எனவே அவரால் இங்கும் அங்கும் செல்ல முடியவில்லை. எனவே அவர் மீதும் தாக்குதல் தொடுத்தார்கள். அவரையும் கொன்று விட்டார்கள். அவர்களில் ஒருவர் எனது காலுக்கு கீழே வாளின் மூலமாக அவரைத் தாக்கினார். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது.

இப்ராஹீம் என்ற அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் தமது காலுக்கு அடியில் இருந்த அந்த அடையாளத்தை எங்களுக்கு காட்டி வந்தார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் வகலா.... ஹதீஸ் எண் 2301)

உமைய்யா மற்றும் அவனது மகனை யார் கொன்றார்கள் என்பது தொடர்பாக இவ்வாறு வருகிறது. அதாவது உமைய்யாவை அன்ஸார் கோத்திரத்தின் பனூ மஃஸனைச் சார்ந்த ஒரு நபர் கொலை செய்தார் என்று வந்துள்ளது.

இப்னு ஹிஷாம் கூறுகின்றார்கள்: உமைய்யாவை ஹஸ்ரத் மஆஸ் பின் அஃப்ரா, கார்ஜா பின் ஸைது மற்றும் குபைப் பின் இஸாஃப் (அதாவது எந்த சஹாபியைப் பற்றி கூறப்பட்டு வருகிறதோ) ஆகியோர் இணைந்து கொலை செய்தனர் என்று வருகிறது. உமைய்யாவை ஹஸ்ரத் பிலால் அவர்கள் கொலை செய்தார்கள் என்றும் கூறப்படுகிறது.

உண்மை என்னவென்றால், இந்த அனைத்து சஹாபாக்களும் இணைந்து உமைய்யாவைக் கொலை செய்தனர். மேலும் உமைய்யாவின் மகனான அலியை ஹஸ்ரத் பிலால் அவர்கள் தாக்குதல் தொடுத்து அவனை கீழே விழச் செய்தார்கள். பிறகு அவனை ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் அவர்கள் கொலை செய்தார்கள்.

(ஷரஹ் ஸர்கானீ அலல் முவாஹிப் லித்துன்யா தொகுதி 2 பக்கம் 296 பாப் கஸ்வா பத்ருல் குப்ரா – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சில சம்பவங்களின் விளக்கமானது நேரடியாக இந்த சஹாபாக்களுடன் தொடர்பு இருப்பதில்லை. ஆனால் நான் எடுத்துக் கூறுவதன் காரணம் என்னவென்றால் நமக்கு வரலாறு தொடர்பாக சிறிதளவாவது ஞானம் இருக்க வேண்டும்.

குபைப் பின் அப்துர் ரஹ்மான் அவர்கள் கூறுகின்றார்கள்: எனது பாட்டனாரான ஹஸ்ரத் குபைப் அவர்களுக்கு பத்ர் போர் நாளில் ஒரு காயம் ஏற்பட்டது. அவர்களது கால் எழும்பு உடைந்து விட்டது. எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த இடத்தில் தமது உமிழ் நீரை இட்டார்கள். அதன் சரியான இடத்தில் அதை வைத்து விட்டார்கள். இதன் காரணமாக குபைப் அவர்கள் நடக்க ஆரம்பித்தார்கள்.

இன்னொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் குபைப் அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு போரின் போது எனது தோளில் ஒரு பெரிய

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! இறைபக்தியை அதன் எல்லா நிபந்தனைகளுடன் ஏற்றுக் கொள்க. நீங்கள் முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்பவர்களாக இருக்கின்ற நிலையில் மட்டுமே உங்களுக்கு மரணம் வர வேண்டும். (3:103)

Faizal Hameed Ilahi (Tittacherry)

காயம் ஏற்பட்டது. அது எனது வயிறு வரை சென்றடைந்தது. இதன் காரணமாக எனது கை தொங்கியது. பிறகு பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்றேன். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த இடத்தில் தமது உமிழ் நீரை இட்டார்கள். அதனை ஒன்றாக இணைத்தார்கள். இதன் காரணமாக அது முற்றிலும் சரியாகி விட்டது. பிறகு எனது காயமும் சரியாகி விட்டது.

(ஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 152 குபைப் பின் யஸஃப் – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஒரு கூற்றிற்கேற்ப ஹஸ்ரத் குபாப் அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் மரணமடைந்தார்கள் என்றும் மற்றொரு கூற்றிற்கேற்ப ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் அன்னார் மரணமடைந்தார்கள் என்றும் வருகிறது.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 224 குபைப் பின் யஸஃப் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 276 குபைப் பின் யஸஃப் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் அல்லாஹ் இந்த அனைத்து சஹாபாக்களின் அந்தஸ்தையும் உயர்த்திக் கொண்டே செல்வானாக.

இப்போது நான் வஃபாத்தான மூன்று நபர்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். மேலும் அவர்களது ஜனாஸா தொழுகையையும் தொழுகைக்குப் பிறகு தொழ வைப்பேன்.

இவர்களில் முதலாவது குறிப்பு ரப்பாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய செய்யது முஹம்மது சர்வர் சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய ரஷீதா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். 24 ஆகஸ்ட் அன்று தமது 74 வது வயதில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்கள் சார்கோட் காஷ்மீரிலிருந்து ஹிஜ்ரத் செய்து பாகிஸ்தான் வந்தனர். இவர்களது தந்தை மதிப்பிற்குரிய தீன் முஹம்மது சாஹிப் இரயில்வேயின் ஊழியர் ஆவார். இவர்களுக்கு ஐந்து வயது இருக்கும்போது மரணமடைந்து விட்டார்கள். இதற்குப் பிறகு இவர்களது தாய் தனியாக இருந்து மிக கடின உழைப்பு மற்றும் முயற்சி செய்தவாறு தமது குழந்தைகளை வளர்த்தார்கள்.

மர்ஹூமின் குடும்பத்தில் மதிப்பிற்குரிய ஃபதஹ் முஹம்மது சாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. அவர்கள் காதியான் சென்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சஹாபியான ஹஸ்ரத் காஸி முஹம்மது அக்பர் சாஹிப் அவர்களின் மூலமாக பைஅத் செய்யும் நற்பேற்றைப் பெற்றார்கள். காஸி சாஹிப் 1984 ஆம் ஆண்டு சந்திர சூரிய கிரகணத்தின் அடையாளத்தைப் பார்த்து தமது குடும்பம் மற்றும் அந்தப் பகுதியில் உள்ளவர்களிடம் இவ்வாறு கூறினார்கள். அதாவது இந்த அடையாளத்தின் மூலம் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் தோன்றி விட்டார்கள் என்பது தெரிய வருகிறது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் காஸி முஹம்மது அக்பர் சாஹிப் அவர்களுடைய குடும்பமும் அன்னாரது குடும்பமும் உறவினர்கள் ஆவர். இதன் காரணமாக இவர்கள் வரை அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி சென்றது. மேலும் பைஅத்தும் செய்தார்கள்.

இவர்களது ஒரு மகன் முஹம்மது ஸகரிய்யா சாஹிப் அவர்கள் லைபீரியாவில் முபல்லிக் ஆவார். அவர்கள் கூறுகிறார்கள்: எனது தாய் சந்தாவை முறையாக செலுத்தி வந்தார்கள்.மிகுந்த கவலை அவர்களுக்கு இருந்தது. எனது சந்தா செலுத்தப்பட்டு விட்டதா என்று அவர்கள் கேட்டறிந்து வந்தார்கள். மேலும் குழந்தைகளின் தர்பிய்யத் விவகாரத்திலும் மிகுந்த கவலை இருந்தது. மிகுந்த அக்கறை செலுத்தி வந்தார்கள். குழந்தைகளை தேவைகளின்றி வீட்டை விட்டு வெளியே செல்ல விட மாட்டார்கள். குழந்தைகளிடம் சுற்றித் திரியும் பழக்கம் வந்து விடக்கூடாது. அல்லது வெளியில் சென்று தீய பழக்கம் வந்து விடக்கூடாது என்பதற்காக இவ்வாறு செய்தார்கள்.

குழந்தைப் பருவத்தில் எங்களது தந்தை எங்களை பள்ளிக்குச் சென்று ஜமாஅத்தாக தொழும்படி கவனமூட்டி வந்தார்கள். குறிப்பாக ஃபஜர் தொழுகைக்காக எழுப்பி விடுவார்கள். அப்போது எனது தாயாரும் பள்ளிவாசலுக்கு அனுப்புவதற்காக எங்களை ஆயத்தப்படுத்தவார்கள். எப்போது வரை நாங்கள் பள்ளிவாசல் செல்லவில்லையோ அப்போது வரை நிம்மதியில்லாமல் இருப்பார்கள். கிலாஃபத்தோடு கலப்பற்ற அன்பு மற்றும் பற்றுணர்வின் தொடர்பு இருந்தது. மிகுந்த கவனத்துடன் குத்பாவை கேட்பார்கள். அதன் குறிப்பையும் எடுப்பார்கள். பிறகு தமது குழந்தைகளிடம் அது குறித்து விவாதிப்பார்கள்.

இவர்களது மூத்த மகள் கூறுகின்றார்கள்: இறுதி நேரத்திலும்கூட தொழுகையின் பக்கம் மிகுந்த கவனம் இருந்தது. மிக நீண்ட தொழுகையை தொழுதார்கள். தொழுகைக்குப் பிறகு அவர்களது உடல் நிலை மோசமானது. மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டார்கள். அங்கு ஹார்ட் அட்டாக்கின் காரணமாக இதயம் செயலிழந்து போயிற்று. எனவே அவர்கள் அல்லாஹ்விற்கு விருப்பத்திற்குரியவராக ஆகி விட்டார்கள். அல்லாஹ்வின் அருளால் 1/8 வஸிய்யத் செய்திருந்தார்கள்.

இவர்களது ஐந்து மகன்களுக்கு மார்க்கத்திற்கு தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. முஹம்மது தபஸ்ஸும் மற்றும் முஹம்மது முஃமின் சாஹிப் ஆகிய இரண்டு மகன்கள் ரப்வாவில் வக்ஃபே ஜதீதின் முஅல்லிமாக தொண்டாற்றி வருகின்றார்கள். தாவூது ஜஃபர் சாஹிப் மற்றும் ஸகரிய்யா சாஹிப் ஆகிய இரண்டு மகன்கள் முரப்பியாகவும், ஆஸிஃப் சாஹிப் என்பவர் வக்ஃபே நவ் ஆகவும் இருக்கின்றார்கள். இவர்கள் கிலாஃபத் லயிப்ரேரியில் கம்ப்யூட்டர் செக்ஷனில் இருக்கின்றார்கள்.

நான் கூறியது போன்று முஹம்மது ஸகரிய்யா சாஹிப் முபல்லிக் அவர்கள் தற்போது லைபீரியாவில் இருக்கின்றார்கள். அவர்கள்

## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் யாவரும் ஒன்றுபட்டு அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாகக் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். மேலும் நீங்கள் பிரிந்து போய் விடாதீர்கள். உங்கள் மீது(செய்து)ள்ள அல்லாஹ்வின் அருளை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் (ஒருவருக்கொருவர்) எதிரிகளாயிருந்தீர்கள். பின்னர் அவன் உங்கள் உள்ளங்களில் நட்பை உண்டாக்கினான். எனவே நீங்கள் அவனுடைய அருளினால் உடன்பிறப்பு போல் ஆகி விட்டீர்கள். நீங்கள் ஒரு நெருப்புக் கிடங்கின் ஓரத்தில் இருந்தீர்கள். பின்னர் அவன் உங்களை அதிலிருந்து காப்பாற்றினான். இவ்வாறே அல்லாஹ் உங்களுக்குத் தன் வசனங்களை நீங்கள் நேர்வழியினைப் பெறும் பொருட்டு விளங்குகின்றான். (3:104)

M.Y. Shahul Hameed (Melapalayam)

தாயின் மரணத்தின்போது ஜனாஸாவிற்கு அங்கு செல்ல முடியவில்லை. அவர்கள் மிகவும் சிறந்த பொறுமையின் முன்மாதிரியை வெளிப்படுத்தியுள்ளார்கள். வெளிநாட்டில் அவர்களது டியூட்டி இருக்கிறது. அதனை அவர்கள் சிறந்த முறையில் செய்து வந்தார்கள். மேலும் என்னால் பணி செய்ய முடியாது என்று அவர்கள் எந்த வகையிலும் வெளிப்படுத்தவில்லை.

அல்லாஹ் இவர்களது குழந்தைகளுக்கு பொறுமையை வழங்குவானாக. குறிப்பாக லைபீரியாவில் முபல்லிக்காக பணியாற்றியவாறு தமது தாயின் மரணத்தின்போது தாயை பார்க்க முடியாத அவருக்கு அல்லாஹ் பொறுமையை வழங்குவானாக. மேலும் அல்லாஹ் இந்த அனைத்து குழந்தைகளுக்கும் தமது தாயின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் இவர்களது தாயின் அந்தஸ்தை உயர்த்துவானாக.

இரண்டாவது ஜனாஸா ஃபிஜி நாட்டைச் சேர்ந்த நாந்தி ஜமாஅத்தின் தலைவர் மதிப்பிற்குரிய முஹம்மது ஷம்ஷீர் கான் சாஹிப் அவர்களுடையதாகும். செப்டம்பர் 5 ஆம் தேதி அன்னாரது மரணம் நிகழ்ந்தது. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

1952 ஆம் ஆண்டு அன்னார் பிறந்தார்கள். 1962 ஆம் ஆண்டு தமது தந்தையுடன் லாஹூரி ஜமாஅத்திலிந்து வெளியேறி ஜமாஅத்தில் பைஅத் செய்து இணைந்தார்கள். முதலில் இவர்கள் லாஹூரியாக இருந்தார்கள். எவ்வாறிருப்பினும் இவர்கள் தமது தந்தையுடன் இணைந்து பைஅத் செய்தார்கள். 1962 ல் அஹ்மதியானார்கள். மேலும் ஃபிஜி ஜமாஅத்தின் ஆரம்ப கால உறுப்பினர்களில் ஒருவர் ஆவார்கள். அல்லாஹ்வின் அருளால் ஒரு நீண்ட காலம் ஜமாஅத்திற்கு தொண்டு செய்யும் நற்பாக்கியம் கிடைத்தது. மாரோ, சோவா, நாந்தி மற்றும் லடோகா போன்ற ஜமாஅத்துகளில் பள்ளிவாசல் கட்டுவதில் அன்னாரது பங்கு மிக முக்கியமானது.

அல்லாஹ்வின் அருளால் உலகியல் ரீதியாகவும் அன்னார் மிகவும் கண்ணியத்துடன் பார்க்கப்பட்டார்கள். ஆனால் ஜமாஅத் பணிகளுக்கே அன்னார் முன்னுரிமை வழங்கி வந்தார்கள். ஜமாஅத்தின் சதர் மட்டுமின்றி, தேசிய வெளியீட்டுத்துறை செயலராகவும், ஒரு முஸ்லிம் பிரெயிமெரி பள்ளிக்கூடத்தின் தாளாளராகவும் அன்னார் இருந்தார்கள். மிகவும் கலப்பற்ற நபராவார். கிலாஃபத்துடன் அன்பு கொண்டவர். மேலும் மிகவும் கட்டுப்பட்டு நடக்கக்கூடிய மனிதர் ஆவார். அன்னார் தமக்குப் பின்னால் ராஸியா கான் சாஹிபா என்ற மனைவியையும், நாதிப்யா நஃபீஸா என்ற மகளையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அவர்களது குழந்தைகளுக்கு அன்னாரது நன்மைகளைச் தொடரச் செய்யும் நற்பாக்கியத்தை வழங்குவானாக.

மூன்றாவது ஜனாஸா கர்தஸ்தானைச் சேர்ந்த தற்போது நார்வேயில் வசித்து வருகின்ற மதிப்பிற்குரிய ஃபாத்திமா முஹம்மது முஸ்தஃபா சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் ஜூன் 13 ஆம் தேதி மரணமடைந்தார்கள். அன்னாரைப் பற்றிய குறிப்பு சிறிது கால தாமதத்திற்குப் பிறகே கிடைத்து. அன்னார் தமது 88 வது வயதில் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

2014 ஆம் ஆண்டு அன்னார் பைஅத் செய்யும் நற்பாக்கியத்தைப் பெற்றார்கள். அன்னார் தமக்குப் பின்னால் மூன்று மகள்களையும் ஐந்து மகன்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அதில் மதிப்பிற்குரிய பீரி ஃபான் முஹம்மது சயீது சாஹிபா மட்டுமே அஹ்மதி ஆவார்கள். அவர்கள் தற்போது நார்வேயில் இருக்கின்றார்கள்.

அவர்களது மகள் கூறுகின்றார்கள்: நான் 1999 ஆம் ஆண்டு நார்வே வந்தேன். அப்போது எனக்கு அதிகமான கஷ்டமான சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டியது வந்தது. எனவே எனது தாய் எனக்கு உதவி செய்வதற்காக கர்தஸ்தானிலிருந்து நார்வே இடம் பெயர்ந்தார்கள். எனது தாயார் படிப்பறிவற்றவர்களாக இருந்தபோதிலும், திருக்குர்ஆனின் பல வசனங்கள் மற்றும் பல நபிமொழிகள் மனப்பாடமாக அவர்களுக்கு நினைவில் இருந்தது. எழுதப் படிக்க அவர்களுக்கு எந்த அளவுக்கு ஆர்வம் இருந்தது என்றால் 40 வயதைக் கடந்த பிறகு கூட கடின முயற்சியுடன் அன்னார் எழுதப் படிக்க கற்றுக் கொண்டார்கள்.

அவர்களது வாழ்க்கையில் மிக முக்கிய பணி என்னவென்றால், அவர்கள் குறித்த நேரத்தில் தொழுகையை நிறைவேற்றுவதே ஆகும். அவ்வாறே மிக அதிகமாக நோன்பு வைத்து வந்தார்கள்.

பெரும்பாலும் இவ்வாறு கூறி வந்தார்கள்: அதாவது எவர்கள் நோன்பு நோற்பதற்கான ஆற்றல் பெறாதவர்களாக இருக்கின்றார்களோ அவர்களுக்காக நான் நோன்பு நோற்கின்றேன்.

மற்றவர்களுக்கு உதவி செய்வதில் எந்த அளவுக்கு துடிப்பு காணப்பட்டதென்றால், சில நேரங்களில் எந்த பெண்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க யாரும் இல்லையோ அந்த பெண்களுக்காக எனது தாய் இரவில் 50 மைல் பயணத்தை மேற்கொண்டு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வார்கள். மேலும் அத்துடன் பொருள் உதவியும் செய்வார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்களது மரணத்தின்போது பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்த பலரது கடிதம் வந்தது. குறிப்பாக பாகிஸ்தான் அஹ்மதி சகோதரிகள் அழுதவாறு இந்த விஷயத்தை வெளிப்படுத்தியுள்ளனர். அதாவது எனது தாய் அவர்களுடன் ஒரு குறிப்பான அன்பின் உறவை வைத்திருந்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் பிறந்ததிலிருந்து எனது தாயுடன் தான் இருக்கின்றேன். அவர்களது உயர்வான நல்லொழுக்கம் மற்றும் வாழ்கையைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. எவர் தொடர்பாகவும் ஒருபோதும் மனதில் தப்பெண்ணத்தை கொண்டிருக்கவில்லை. பெரிய பெரிய தவறுகளையும் மன்னிப்பதற்கும் தயாராக இருந்தார்கள். மேலும் எங்களுக்கு குழந்தைப் பருவத்திலிருந்து இந்த அடிப்படையான விஷயத்தைப் போதித்து வந்தார்கள். அதாவது உங்களுக்கு எதிராக பேச வேண்டியது வந்தாலும் உண்மையைப் பேசுங்கள். மேலும்

## திருக்குர்ஆனிலிருந்து...

தங்களிடம் மிகத்தெளிவான அடையாளங்கள் வந்த பின்னர் பிரிந்துவிடவும், (தங்களுக்குள்) கருத்து வேறுபாடு கொள்ளவும் செய்தவர்களைப் போன்று நீங்கள் ஆகி விடாதீர்கள். அத்தகையவர்களுக்கே (அந்நாளில்) பெரும் ஆக்கினை (விதிக்கப்பட்டு) உள்ளது. (3:106)

A.Shamsul Alam
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

உங்களது கண்கள் மற்றும் கைகள் எதாவது தவறு செய்திருந்தால் பிறகு உங்களுக்கு எந்த அளவுக்கு தைரியம் இருக்க வேண்டுமென்றால் நீங்கள் உங்களது கண் மற்றும் கைகளை குற்றவாளி என்று கூற வேண்டும். சந்திக்ககூடிய ஒவ்வொருவரையும் சிரித்த முகத்துடன் சந்திப்பார்கள். அவர்களது நாவு எப்போதும் துஆ செய்வதில் மூழ்கி இருந்தது. அவர்களுக்கு அல்லாஹ் மற்றும் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது அதிக அன்பு இருந்தது. இதன் காரணமாகக்கூட அவர்களுக்கு காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியத்தை அல்லாஹ் வழங்கி இருக்கலாம்.

அவர்களது மகள் கூறுகின்றார்கள்: 2007 ஆம் ஆண்டு MTA வைப் பார்த்தேன். பிறகு திடீரென்று அது மறைந்து விட்டது. பிறகு ஏறக்குறைய 3 வருடங்களுக்குப் பிறகு 2010 ஆம் ஆண்டு MTA அல் அரபிய்யா மீண்டும் கிடைத்தது. இதைப் பார்த்து நான் கூச்சலிட்டவாறு எனது தாயாரிடம், அந்த சேனல் கிடைத்து விட்டது என்றேன். மேலும் நான் எனது தாயாரிடம், வாருங்கள். இதனைக் கேட்போம். ஏனென்றால் இந்த மக்கள் நாம் யாரை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கின்றோமோ அந்த இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றி விட்டார்கள் என்று கூறுகின்றனர் என்று கூறினேன். எனது தந்தையும் இதனையே கூறி வந்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எனது தாயார் MTA பார்க்க ஆரம்பித்தார்கள். பிறகு சில நாட்களுக்குப் பிறகு எனது சகோதரிகளுக்கும், சகோதரர்களுக்கும் இதைப் பற்றி கூறினார்கள். ஆனால் அவர்கள் எத்தகைய கூற்றை கூறினார்கள் என்றால் அதனால் எனது தாயாரின் முகம் மாறி விட்டது. ஆனால் அவர்கள் அந்த விஷயத்தைப் பொருட்படுத்தாமல் தொடர்ச்சியாக MTA பார்த்து வந்தார்கள். பிறகு எனது தாயார் கர்கிஸ்தான் சென்ற பிறகு எனது சகோதரர்களின் கூற்று அவர்களது உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. பிறகு அவர்கள் எனக்கு எதிராக ஆகிவிட்டார்கள். மீண்டும் என்னிடத்தில் வந்து MTA பார்ப்பதிலிருந்து என்னை தடுத்தார்கள்.

எவ்வாறிருப்பினும் நான் பைஅத் செய்த பிறகு நிலைமை மேலும் மோசமானது. எனது தாயாரிடம், உனது மகள் காஃபிராகி விட்டாள் என்று அவர்கள் கூறினர். எவ்வாறிருப்பினும் எனது தாய் எனது சகோதரர்களிடம் செல்லும்போது அவர்களது கூற்றைக் கேட்டு எனக்கு எதிராக ஆகி விடுவார்கள். திரும்பி வந்தால் பிறகு மீண்டும் MTA பார்க்க ஆரம்பித்து விடுவார்கள். அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கஸீதாக்கள் மிகவும் விருப்பமானதாக இருந்தது. அதைக் கேட்டு பெரும்பாலும் அழத் தொடங்கி விடுவார்கள்.

ஒரு நாள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் யா அன்ப பைஸில்லாஹி வல் இர்ஃபானி என்ற இந்த கஸீதாவைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது நான் அவர்களிடம், இந்த கவிதையை எழுதக் கூடியவர் காஃபிர் என்று கூற முடியுமா? என்று கேட்டேன். கோபத்துடன் அவர்கள் என்னைப் பார்த்தார்கள். மேலும் இந்த நபரை காஃபிர் என்று எந்த அநீதியாளர்தான் கூற முடியும் என்று கூறினார்கள். அதற்கு நான், உங்களது பிள்ளைகள்தான் என்று கூறினேன். அதற்கு அவர்கள் மௌனமாகி விட்டார்கள்.


பிறகு நான் எனது தாயாரிடம், நீங்கள் உங்களது ஈமானின் வலிமையின் காரணமாக பிரசித்தி பெற்றவர்கள் ஆவீர்கள். எனவே நீங்கள் எதற்காக அஞ்சுகின்றீர்கள். இறைவனைக் கண்டு அஞ்சுகின்றீர்களா? அல்லது உங்களது பிள்ளைகளைக் கண்டு அஞ்சுகின்றீர்களா? என்று கேட்டேன். எனது இந்த கேள்வியினால் அவர்கள் மிகுந்த தாக்கத்திற்கு ஆளானார்கள். ஆனால் எந்த பதிலையும் அவர்கள் கொடுக்கவில்லை. அந்த இரவில் என்னை அழைத்து, ஜமாஅத்தின் தலைமையகத்திற்கு போன் செய்து, நான் பைஅத் செய்ய வேண்டும் என்பதை தெரிவித்து விடு என்று கூறினார்கள். நான், நீங்கள் மீண்டும் சிந்தியுங்கள் என்று கூறினேன்.

எவ்வாறிருப்பினும் முழு இரவும் அவர்கள் சிந்தித்தார்கள்; துஆ செய்தார்கள். மேலும் காலையில் எழுந்ததுமே, நான் பைஅத் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்து விட்டேன் என்று கூறினார்கள். 2016 ஆம் ஆண்டு நான் அங்கு சென்றபோது என்னை சந்திப்பதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைத்தது. காலத்தின் கலீஃபாவை சந்தித்ததனால் பெரும் மகிழ்ச்சியில் இருந்தார்கள். மேலும் ஒவ்வொருவருக்கும் இதைப் பற்றி கூறி வந்தார்கள். அன்னாருக்கு கிலாஃபத்தோடு நன்றியுணர்வின் தொடர்பு இருந்தது.

அல்லாஹ் இவர்களுடன் பாவமன்னிப்புடனும், கருணையுடனும் நடந்து கொள்வானாக. அந்தஸ்தை உயர்த்துவானாக. மேலும் இவர்களது மகளின் ஈமானையும் வலுப்படுத்துவானாக. மேலும் இவர்களது அஹ்மதியல்லாத பிள்ளைகளின் உள்ளங்களையும் அல்லாஹ் திறப்பானாக. மேலும் அவர்களது துஆக்களை இவர்களது ஹக்கில் நிறைவேற்றுவானாக.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

## காதியான் ஆண்டு மாநாடு தொடர்பான முக்கிய அறிவிப்பு

2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறும் காதியான் ஆண்டு மாநாடு தொடர்பாக, இது 125 வது ஆண்டு மாநாடு என்று பத்ர் பத்திரிகையில் அறிவிப்பு செய்யப்பட்டு வந்தது. இந்த வரலாற்று சிறப்புமிக்க மாநாடு தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் சில குறிப்பான நிகழ்ச்சிகளுக்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். இது தொடர்பான தகவலை சுற்றறிக்கை மூலமாக ஜமாஅத்திற்கும் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில் ''தாரீகே அஹ்மதிய்யத்'' காதியான் துறையின் ஆய்வின் அடிப்படையில், **2019 ஆம் ஆண்டு நடைபெறும் ஆண்டு மாநாடு 125 வது ஆண்டு மாநாடு அல்ல. மாறாக 126 வது ஆண்டு மாநாடாகும்** என்ற தகவல் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் மிகுந்த பரிவுடன் இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். மேலும் நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கான வழிகாட்டலை வழங்கியுள்ளார்கள்.

(செயல் தலைவர், நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா)

## "எனது அன்பிற்குரிய தந்தை"

(மவ்லவி அபுல் ஹஸன் ஆபித் – முபல்லிக் நூருல் இஸ்லாம் – திருப்பூர்)

என் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய தந்தை மர்ஹூம் ஜனாப். வெ.அ. முஹம்மது யூசுஃப் சாஹிப் அவர்கள் 09.07.1949 அன்று ஒளி முஹம்மது பேட்டை காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிறந்தார்கள். அன்னார் சிறு வயதிலிருந்து மார்க்கத்தின் மீது பற்றுள்ளவராகவும், தொழுகையில் அதிக ஈடுபாடு கொண்டவர்களாகவும் திகழ்ந்தார்கள். மேலும் இஸ்லாத்தின் தூய ஸ்தாபகர் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அதிகமாக நேசம் கொண்டவார்களாக திகழ்ந்தார்கள்.

எனது அன்பிற்குரிய தந்தை முஹம்மது யூசுஃப் அவர்கள் இஸ்லாத்தின் தூய ஸ்தாபகர் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப இக்காலத்தில் அன்னாரின் உண்மைப் பேரன்பராக தோன்றியுள்ள உம்மத்தி நபி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹாஹவும், இமாம் மஹ்தியாகவும் ஏற்றுக் கொண்டு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் இணைவதற்கு முன்னுள்ள காலத்தில், கல்வத்து நாயகம் தரீக்கத்தை பின்பற்றக் கூடியவர்களாக இருந்தார்கள். தர்கா வழிபாடுகள், கத்தம் மவ்லூது, ஃபாத்திஹா ஆகியவற்றில் அதிக ஈடுபாட்டு கொண்டவர்களாக விளங்கினார்கள். எல்லா வகையான ஷிர்க் மற்றும் பித்அத் அவர்களிடம் காணப்பட்ட போதிலும் அன்னார் தொழுகையை குறித்த நேரத்தில் தொழக் கூடியவர்களாக இருந்தார்கள். அதன் காரணமாகவே அல்லாஹ் அவர்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியத்தை வழங்கினான்.

சென்னையில் சலூன் கடை வைத்திருந்த உடன்குடியைச் சார்ந்த மர்ஹூம் M.K.S. முஹம்மது சாஹிப் அவர்கள்தான் என் தந்தையாருக்கு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் பற்றிய தூதுச் செய்தியை எடுத்துக் கூறி தப்லீக் செய்தார்கள்.

இந்த காலகட்டத்தில் எனது தந்தை ஒரு கனவு கண்டார்கள். அதில் பாம்பு அவர்களை கொத்த முற்படுகிறது. ஆனால் எனது தந்தையோ நகர்ந்து கொண்டே பின்னால் செல்கின்றார்கள். பிறகு அவர்களது கையில் ஏதோ ஒரு பொருள் கிடைக்க அந்தப் பொருளை அந்தப் பாம்பிற்கு முன்பு காட்டியபோது அந்தப் பாம்பு ஓடி விட்டது. மேலும் கையில் வைத்திருந்த அந்தப் பொருளை எனது தந்தை பார்த்த போது, அது ஒரு புகைப்படமாக இருந்தது. மேலும் அந்த புகைப்படத்தில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இரண்டாவது கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்களின் தோற்றத்தை அன்னார் கண்டார்கள்.

பிறகு எனது தந்தை ஆ.மு.ளு. முஹம்மது சாஹிப் அவர்களது சலூன் கடைக்குச் சென்றபோது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் புகைப்படத்தைப் பார்த்தபோது இந்த நபரைத்தான் நான் கனவில் பார்த்தேன் என்று கூறினார்கள்.

இவ்வாறு சிறிது நாட்களுக்குப் பிறகு எனது தந்தை 1978 ஆம் ஆண்டு பைஅத் செய்ய வேண்டும் என்ற தமது விருப்பத்தைத் தெரிவித்தார்கள். இறுதியாக மவ்லவி முஹம்மது உமர் சாஹிப் அவர்கள் அன்னாரிடம் பைஅத் வாங்கினார்கள்.

பைஅத் செய்த பிறகு எனது தந்தையின் வாழ்க்கை முற்றிலும் மாறி விட்டது. அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்த பிறகு ஆன்மீக ரீதியில் முன்னேற்றம் அடைய அன்னார் எப்போதும் முயற்சி செய்து வந்தார்கள். மவ்லவி முஹம்மது உமர் சாஹிப் அவர்கள் எனது தந்தையுடன் உடன் பிறந்த சகோதரரைப் போன்று பழகினார்கள். மவ்லவி சாஹிப் அவர்கள் வழங்கிய தர்பிய்யத்தின் விளைவாக அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் மீதான அன்பு அன்னாரது உள்ளத்தில் அதிகரித்துக் கொண்டே சென்றது.

எனது தந்தை காலத்தின் கலீஃபாவின் மீது அளப்பற்ற அன்பு கொண்டவராக திகழ்ந்தார்கள். காலத்தின் கலீஃபாவிற்கு தொடர்ச்சியாக துஆவிற்காக கடிதம் எழுதக் கூடியவர்களாக இருந்தார்கள். ஹுஸூர் அவர்களின் குத்பா ஜுமுஆ பேருரையை முறையாக கேட்டு அதிலிருந்து பயன் பெற முயற்சி செய்து வந்தார்கள். அன்னார் வஸிய்யத் செய்திருந்தார்கள்.

மேலும் அன்னார் பைஅத் செய்த பிறகு காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளும் எந்தவொரு சந்தர்ப்பத்தையும் கைநழுவ விட்டதில்லை. வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் காதியான் செல்வார்கள். காதியான் செல்ல இயலாத நிலை ஏற்பட்டால் அன்னார் அதற்காக மிகவும் வருந்தக் கூடியர்களாக இருந்தார்கள்.

அன்னார் எல்லா விஷயத்திலும் அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை வைத்திருந்தார்கள். எந்த விஷயமாக இருந்தாலும் சரி துஆ செய்யுமாறு அறிவுறுத்துவார்கள். மேலும் அவனிடமே நமது தேவைகளை கேட்க வேண்டும் என்று அறிவுறுத்தி வந்தார்கள். திருக்குர்ஆன் மீது அதிக நேசம் கொண்டிருந்தார்கள். தஃவத்தே இலல்லாஹ் (அல்லாஹ்வின் பால் மக்களை அழைத்தல்) களத்தில் அன்னார் செயல் துடிப்புடன் செயல்பட்டார்கள். தமது இறுதி மூச்சு வரை இப்பணியை செய்து வந்தார்கள்.

தமது வாழ்நாளின் இறுதி நாட்களில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலும் இப்பணியை அன்னார் செய்து வந்தார்கள். செவிலியர்களுக்கு சூரா ஃபாத்திஹாவின் விளக்கத்தை எடுத்துக் கூறி அதன்படி இறைவனிடம் துஆ செய்யுங்கள் என கூறி வந்ததை நான் இங்கு நினைவு கூருகின்றேன். அனைத்து செவிலியர்களும் மிகவும் கவனமாக அன்னாரது கூற்றை கேட்டார்கள். எப்போதும் சிரித்த முகத்துடனும், அன்புடனும் பழகுவார்கள். மனித இனத்தின் மீது அனுதாபம் கொண்டவர்களாக திகழ்ந்தார்கள். ஜமாஅத்தின் நிகழ்ச்சிகளில் முறையாக கலந்து கொள்வார்கள்.

நோயுற்றிருந்தபோதிலும் கூட எந்த முறையீடும் செய்யாலமல் அல்லாஹ்வின் விருப்பத்தை மனதார ஏற்றுக் கொண்டார்கள். அவனது விருப்பத்தில் நான் திருப்தி கொள்கின்றேன் என்பதை அன்னார் செயல் பூர்வமாக வெளிப்படுத்தினார்கள். இறுதியாக அன்னார் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் தேதி திங்கட்கிழமையன்று மாலை 5 மணிக்கு வஃபாத்தாகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

மே 21 செவ்வாய்கிழமை அன்று மாலை 6.00 மணிக்கு மவ்லவி M.B. தாஹிர் அஹ்மது சாஹிப் (முபல்லிக் நூருல் இஸ்லாம், சென்னை) அவர்கள் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள்.

பிறகு அன்னாரது ஜனாஸாவை காதியானிலுள்ள பெஹஷ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்வதற்காக காதியான் கொண்டு செல்லப்பட்டது. மே 23 வியாழக்கிழமையன்று மாலை 6.30 மணி அளவில் மதிப்பிற்குற்கும் மரியாதைக்குமுரிய மவ்லவி இனாம் கவ்ரி சாஹிப் (நாஸிர் ஆலா – காதியான்) அவர்கள் அன்னாரது ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். காதியானிலுள்ள மக்களும் ஜனாஸா தொழுகையில் கலந்து கொண்டார்கள்.

அன்னார் தமக்குப் பின்னால் மனைவி மட்டுமின்றி 5 ஆண் பிள்ளைகளை விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் அன்னாரின் பாவங்களை மன்னித்து அன்னாருடன் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அன்னார் விட்டுச் சென்ற நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை எங்களுக்கும் வழங்குவானாக. ஆமீன்

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 17 Oct 2019 Issue No. 42

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த உறுதி வாய்ந்த வாக்குறுதிக்கேற்ப இந்தக் காலத்திலும் விண்ணிலிருந்து ஓர் ஆசிரியர் வந்துள்ளார்.

اٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ

மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்) **(62:4)** என்ற இந்த வசனத்திற்கேற்ப உண்மையாளராகவும் வாக்களிக்கப்பட்டவராகவும் அவர் தோன்றினார். அவர்தான் உங்கள் மத்தியில் பேசிக் கொண்டிருக்கின்றார். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த காலம் தொடர்பாக செய்த முன்னறிவிப்பைச் சுட்டிக் காட்டியவாறு மீண்டும் நான் கூறுகின்றேன். அன்னார் இவ்வாறு முன்னறிவிப்புச் செய்தார்கள்.

அதாவது மக்கள் திருக்குர்ஆனை ஓதுவார்கள். ஆனால் அது அவர்களின் தொண்டையின் கீழ் இறங்காது. தற்போது நம்முடைய எதிரிகள் மட்டுமல்ல. அல்லாஹ்வின் வாக்குறுதிக்கு மதிப்பளிக்காமல் இருக்கின்றார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றின் மீது கவனமற்றவர்களாக இருப்பவர்களும், நன்றாக தொண்டையை அசைத்து

يٰعِيْسٰى اِنِّيْ مُتَوَفِّيْكَ وَرَافِعُكَ اِلَيَّ

ஈஸாவே! நான் உமக்கு (இயற்கையான) மரணத்தைத் தருவேன். உமக்கு எனது சந்நிதியில் உயர்வு தருவேன் **(3:56)**

فَلَمَّا تَوَفَّيْتَنِيْ

ஆனால் நீ எனக்கு மரணத்தைத் தந்த பின் **(5:118)** என்ற வசனத்தை வினோதமான ராகத்தில் படிக்கின்றார்கள். ஆனால் அதைப் புரிவதில்லை. மேலும் எவராவது கருணையின் அடிப்படையில் அறிவுரை செய்தால் அதைப் புரிவதற்கும் முயற்சி செய்வதில்லை என்பதே மிகவும் வருத்தத்திற்குரிய விஷயமாக இருக்கிறது. புரியவில்லை என்றாலும் கூட சரி; அவர் என்ன கூறுகிறார் என்பதை கேளுங்கள். ஆனால் கேட்பதுமில்லை.

அவர்கள் கேட்கவும் வேண்டும். நல்லெண்ணத்துடன் செயல்படவும் வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் தன்னுடைய அருளினால் பூமியின் பக்கம் கவனம் செலுத்தாமல் இருந்திருந்தால் இஸ்லாமும் பிற மார்க்கங்களைப் போல ஒரு மரணித்த மார்க்கம் என்றும் கட்டுக்கதை என்றுமே கருதப்படும். எந்தவொரு மரணித்த மார்க்கமும் பிறருக்கு வாழ்வை அளிக்க முடியாது.

ஆனால் இஸ்லாம் தற்போது வாழ்வை வழங்குவதற்கு ஆயத்தமாக இருக்கிறது. ஆனால் எல்லாம் வல்ல இறைவன் எந்தவொரு பணியையும் காரணிகள் இல்லாமல் செய்வதே இல்லை. இதுவே அல்லாஹ்வின் நடைமுறையாகும். அந்தக் காரணிகள் நமது கண்களுக்கு தென்படுகிறதா இல்லையா என்பது வேறு விஷயம்.

ஆனால் காரணிகள் கண்டிப்பாக இருக்கின்றது என்பதில் எந்த ஒரு மாற்றுக் கருத்தும் இல்லை. அதேபோன்று வானத்திலிருந்து ஒலிகள் இறங்குகின்றது. அது பூமியை வந்தடைந்ததும் காரணிகளின் வடிவத்தை மேற்கொண்டு விடுகின்றது. அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிள் காலகட்டத்தை இருள் நிறைந்த மற்றும் வழிதவறிய காலமாகக் கண்டான்.

மேலும் அனைத்து விதமான தீமைகள் மற்றும் அநீதியின் கார்மேகம் உலகின் மீது படர்ந்திருந்தது. அந்த நேரத்தில் அந்த இருளை நீக்குவதற்கும், வழிதவறியவர்கள் நேர்வழி பெறும் பொருட்டாகவும் நற்பேறு பெற்றவர்களாக மாற்றுவதற்கும் ஒரு ஒளி தரக்கூடிய சூரியனை ஃபாரான் மலைக்குன்றின் மீது பிரகாசிக்கச் செய்தான். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தோன்றச் செய்தான்.

(மல்ஃபூஸாத் தொகுதி **1** பக்கம் **81–83 – 2018** ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் உங்களது அனைத்து செயல்களையும் நன்கு அறியக்கூடியவன். அவன் ஒவ்வொரு நொடியும் நம்மைப் பார்த்துக் கொண்டிருகின்றான். நாம் சிந்திக்கின்றவற்றையும் அவன் அறிவான். நமது மறைவான விஷயங்களையும் அவன் அறிவான். நமது எண்ணங்களையும் அவன் அறிவான். அவனை ஏமாற்ற முடியாது.

(**3** ஆகஸ்ட் **2019** அன்று ஆண்டு மாநாட்டில் லஜ்னாக்களுக்கு நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து....)

## திருக்குர்ஆனிலிருந்து...

மக்களு(டைய பயனு)க்காகத் தோற்றுவிக்கப் பெற்ற நீங்கள் (மற்றெல்லாரையும் விடச்) சிறந்த கூட்டத்தினராவீர்கள். நீங்கள் நன்மையை ஏவுகின்றீர்கள். தீமையிலிருந்து தடுக்கின்றீர்கள். மேலும் அல்லாஹ்விடம் நம்பிக்கை கொள்கின்றீர்கள். **(3:111)**

S.S.H.Muhammed Lebbai (Melapalayam)

## திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் (நிராகரிப்பவர்கள்) இவ்வுலக வாழ்விற்காகச் செலவு செய்பவற்றின் நிலை, ஒரு காற்றிற்கு ஒப்பானது. கடுங்குளிர் கொண்ட அது, தமக்குத்தாமே நீங்கிழைத்துக் கொண்ட ஒரு சமதாயத்தின் விளை நிலத்தில் வீசி அதனை அழித்து விட்டது. அல்லாஹ் அவர்களுக்கு அநீதி இழைக்கவில்லை. மாறாக, அவர்கள் தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்டனர். **(3:118)**

A.Basheer Ahmad (Melapalayam)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad